Journal of Modern Tamil Research; Vol. 8, No. 1; 2019; Page:369-375.

ISSN: 2321-984X

Published by Raja Publications

---

# இலங்கை சமூகத்தை பாதிக்கும் பண்பாட்டுச் சிந்தனைகளும் பண்பாட்டுச் சார்பியத்தை நோக்கி சமூகத்தை நகர்த்துதலும்

**கலாநிதி எஸ்.எம். அய்யூப்,**

தலைவர், சமூகவியல் துறை

சிரேஷ்ட விரிவுரையாளர்

கலை கலாசார பீடம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

0094769643899, மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

**சுருக்கம்**

ஒரு தனிமனிதனுடைய நம்பிக்கைகள், நடவடிக்கைகள் அவனுடைய சொந்த பண்பாட்டின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டும் எனும் கொள்கையே பண்பாட்டுச் சார்பியமாகும் (Cultural relativism). தனது பண்பாட்டை மையப்படுத்தி ஏனைய பண்பாடுகளை தரக்குறைவாக மதிப்பீடு செய்வதை தன்னினஉயர்வுவாதமாகவும் (Ethnocentrism), தனது பண்பாட்டை ஏனைய பண்பாடுகளோடு ஒப்பிட்டு ஏளனமாக கருதுவதை அயலினப்பற்றுவாதமாவும் (Xenocentrism) சமூகவியலாளர்கள் கருதுகின்றார்கள். இவ்வாதங்கள் உலகம் முழுவதும் எவ்வாறு பரவிக் காணப்படுகின்றதென்பதை பொதுவாகவும் இலங்கைச் சமூகத்தில் புரையோடியுள்ள விதத்தை விரிவாகவும் இவ்வாய்வுக் கட்டுரை விளக்க முனைகிறது. இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்திய இவ்வாய்வு முதலாம் நிலைத் தரவு மூலமான அவதானத்தையும் பயன்படுத்தி விவரண முறையில் தரவுகளை பகுப்பாய்வு செய்கின்றது. இலங்கையில் மூவின மக்களிடையேயும் இவ்வாதங்கள் இயல்பாக புரையோடிப் போயுள்ளதை இவ்வாய்வு கண்டுபிடித்திருக்கின்றது. தன்னினஉயர்வுவாதம் மற்றும் அயலினப்பற்றுவாதம் ஆகிய இரு உணர்வுகளை குறைப்பதற்கான பரிந்துரைகளையும் பண்பாட்டுச் சார்பிய சிந்தனையை வளர்ப்பதற்கான ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

**பிரதான சொற்கள் : பண்பாடு, பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை, இனக்குழு**

## அறிமுகம்

பண்பாடு மிகவும் விரிந்த கருத்தைக் கொடுக்கும் ஒரு சொல்லாகும். நடத்தை வடிவம், தத்துவங்கள், ஒழுக்கம், நன்னெறிகள், வழக்கங்கள், பழக்கங்கள், சமயம், அரசியல், பொருளாதாரம், ஏனைய செயற்பாடுகள் போன்ற வாழ்வின் அனைத்து விடயங்களையும் பண்பாடு உள்ளடக்கின்றது. மனிதன் தனது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் பெற்றுக் கொண்ட அனைத்தையும் பண்பாடு குறித்து நிற்கின்றது. இதனையே மெகில்வர் மற்றும் பேச் போன்றோர் ஒரு தனியன், குழுவிலிருந்து பெற்றுக் கொள்ளும் சமூகப் பாரம்பரியம் (Social heritage) அனைத்தும் பண்பாடு ஆகும் எனக் கூறுகின்றார்கள் (அய்யூப், 2003).

பண்பாடு குறித்த 160 இற்கு மேற்பட்ட வரையறைகளை குரோபர் மற்றும் குழுக்கான் ஆகிய இருவரும் தொகுத்துள்ளபோதும் மானிடவியலாளர் ஈ.பி. டைலரின் வரைவிலக்கணம் பலராலும் ஏற்கப்பட்டதாகும். பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் (Morals), சட்டம், வழக்கம் (Custom) முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் (Habits) அடங்கிய முழுமைத் தொகுதியாகும் எனக் கூறுகின்றார்கள். (பக்தவத்சலபாரதி, 1999).

## ஆய்வின் நோக்கம்

தன்னினஉயர்வுவாதமும் அயலினப்பற்றுவாதமும் இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அடையாளங் காணுவதை முதல்தர நோக்கமாகவும், பண்பாட்டுச் சார்பியத்தை வளர்ப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதை துணை நோக்கமாகவும் இவ்வாய்வு கொண்டுள்ளது.

## ஆய்வுப் பிரச்சினை

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் பல்கிப் பெருகி இருந்த போதும், தவறான புரிதல்கள் பொது வெளியிலும் இலங்கைப் பரப்பிலும் தோன்றிய வண்ணமே உள்ளன. அதேநேரம் தனது சொந்த பண்பாடு குறித்த சரியான புரிதல்கள் இன்றி அயல் பண்பாட்டு மீதான மோகமும் இலங்கைச் சூழலில் மலிந்து காணப்படுகின்றன.

## ஆய்வு முறையியல்

இரண்டாம் நிலைத் தரவுகளையே இவ்வாய்வு பிரதானமாக பயன்படுத்துகின்றது. ஆய்வாளனின் அவதானம் (Observation) முதல்நிலைத் தரவாக இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது. விபரண ரீதியான பகுப்பாய்வை (Descriptive study) இவ்வாய்வு கைக்கொள்கின்றது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

தன்னினஉயர்வுவாதம் மற்றும் அயலினப்பற்றுவாதம் எனும் இரு பண்பாட்டுச்சிந்தனைகள் இலங்கை சமூகத்தின் சிந்தனையை ஆக்கிரமித்திருக்கின்றன. இவ்விரு சிந்தனைகளும் இலங்கை மக்களை கோணிய வழி சிந்திக்கத் தூண்டுகின்றன.

**01. தன்னினஉயர்வுவாதம் (**Ethnocentrism**)**

தன்னினஉயர்வுவாதம், தமது சொந்த பண்பாட்டு முறைகளை உன்னதமாகவும் ஏனைய பண்பாட்டை தாழ்வாகவும், அருவருப்பாகவும் கருதுகின்றது. அமெரிக்க சமூகவியலாளர் சம்னர் (W.G.Sumner) என்பவரால் 1906 களில் தன்னினஉயர்வுவாதம் (Ethnocentrism) எனும் சொல் பயன்படுத்தப்பட்டதாக பரவலாக நம்பப்படுகின்றது. எனினும் இவருக்கு முன்னரே கும்ளோவிக்ஸ் (Ludwing Gumplowicz) என்பவரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டதாக பல குறிப்புக்களும் சமூகவியல் புலத்தில் நிலவுகின்றன. மஜீ (William J. McGee) போன்ற மானிடவியலாளர்கள் சம்னருக்கு முன்பே இச்சொல்லை பயன்படுத்தியிருப்பதாகவும் சில சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எனினும் சம்னராலேயே இச்சொல் பிரபல்யமடைந்தது என்பதில் எல்லோரும் ஒன்றுபடுகின்றார்கள் (பிசுமிக், 2015).

பழங்குடியினரின் அல்லது இனக்குழுவினரின் தன்மையவாதமாக (Egocentrism) தன்னின உயர்வுவாதத்தை சம்னர் (1906) பார்க்கின்றார். ஒருவருடைய சொந்த குழுவை மையமாக வைத்து ஏனையோரை அளக்கும் மற்றும் தரமதிப்பீடு செய்யும் மனோநிலையையே தன்னினஉயர்வுவாதம் குறிப்பதாக அவர் மேலும் கூறுகின்றார். குழுக்களிடையே கட்சிதமான உறவு, பரஸ்பர ஒருங்கிணைவு, அர்ப்பணம், இனத்தூய்மை, வெளிக்குழுவை நிராகரித்தல், குழுவின் நிலைத்ததன்மை, குழு ஒற்றுமை போன்றவற்றை தன்னினஉயர்வுவாதம் வளர்ப்பதற்காக சம்னர் மேலும் குறிப்பிடுகின்றனர்.

தமது சொந்தப் பண்பாடுகளை அளவீடாக கொண்டு ஏனையோரின் பண்பாடுகளை மதிப்பீடு செய்யும் மனப்பாங்கையே இச்சொல் குறிப்பதாக கிட்ன்ஸ் (1997) குறிப்பிடுகின்றார். பொதுவாக எல்லா மக்களும் தமது பண்பாட்டை (நம்பிக்கை, விழுமியம், நடத்தைப்

பாங்குகள், வாழ்வு முறை) ஏனையோரின் பண்பாட்டை விட உயர்வானவையாக கருதுகின்றார்கள். தங்களை நாகரீகவான்களாகவும் ஜனநாயகத்தின் காவலாளிகளாகவும் கருதும் அதேவேளை அடுத்தவர்களை காட்டுமிராண்டிகளாகவும், தாழ்வானவர்களாகவும், சர்வாதிகார சிந்தனை கொண்டவர்களாகவும் கருதுகின்றார்கள்.

பழங்குடிகளை காட்டுமிராண்டிகளாக கருதும் பார்வை, ஏனைய சமூகங்களை தரக்குறைவாக பார்க்கும் போக்கு போன்றவை தன்னினஉயர்வுவாதம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஊடுருவிட்டது என்பதற்கான அடையாளமாகும் என சமூகவியலாளர்கள் கருதுகின்றார்கள். இத்தகைய தன்னினஉயர்வுவாதம் சமூக உறுப்பினர்களிடையே வளரும் போது அது குருட்டுத்தனம், குறுகிய மனப்பாங்கு போன்றவை துளிர்விட்டு வளர்வதற்கு கால்கோள் வைத்துவிடுகின்றது. இந்த பூமி சந்தித்த மயிர்கூச்செறியும் சண்டைகள் பலவற்றிற்கும் சாம்பல் மேடாய் போன சமூக வாழ்வு பலவற்றிற்கும் மறைகரமாய் தன்னினஉயர்வுவாதம் செயற்பட்டிருக்கின்றது.

வேறுபட்ட இனக்குழுக்கள், மரபினம், சமயக் குழுக்கள் போன்றவை காணப்படும் ஒரு இடத்தில் தன்னினஉயர்வுவாதம் காணப்படுவது தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தமாகும். ஒரு இனக்குழு அடுத்த இனக் குழுவை விட தன்னை உயர்வாக கருதும் போது இம்மனோ நிலை தவிர்க்க முடியாத விளைவாக மாறிவிடுகின்றது. ஒரு தனியன் தனது பாரம்பரியத்தின் வலிமை பற்றியும் அதன் உன்னதம் பற்றியும் மேம்பட்ட கருத்தை கொள்ளும் போது தன்னினஉயர்வுவாதம் இயல்பாக அவன் மனதில் முளைவிடுகின்றது. இனவாத (racism) உணர்வின் பிரயோக வடிவமே தன்னினஉயர்வுவாதமாகும் எனும் சிந்தனையும் புலமை மரபில் நிலவுகின்றது.

காலணித்துவவாதிகள் ஆபிரிக்க மக்களை அடிமைகளாகவும் ஏனைய நாட்டு மக்களை தரக்குறைவாகவும் நடத்திய நிகழ்வு தன்னினஉயர்வுவாதத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் தன்னினஉயர்வுவாதம் அதைவிடவும் நுண்ணியது. தற்கால சூழலிலும் பரவலாக அவதானிக்க கூடியது.

ஏனைய எல்லா நாடுகளை விடவும் சுகாதாரம், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்றவற்றால் தாமே உயர் நிலையில் இருக்கின்றோம் என அமெரிக்கா தன்னைக் கருதி உலக நாடுகள் பலவற்றின் செயற்பாடுகளில் தலையிடுகின்றது. ஆரிய இனமே உயர்ந்த இனம் எனும் ஹிட்லரின் தன்னினஉயர்வுவாதம் இலட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்து தடம் தெரியாமல் அழிக்க காரணமாகியது.

எல்லா நாடுகளுக்கும் மையப்புள்ளியாக தான் இருக்க வேண்டும் எனும் சீனாவின் சிந்தனை கன்பூசியஸின் சிந்தனைப் புள்ளியிலிருந்து வந்தவைதாம். கன்பூசியசின் சிந்தனை (Mandate of Heaven) குடிமக்கள் மீதும் ஏனைய நாடுகள் மீதும் கடுமையான சட்டங்களை

விதிப்பதற்கான தெய்வீக சக்தியை (Divine power) ஆட்சியாளர் கொண்டிருக்கின்றார் எனக் கூறுகின்றது.

தமது வாழ்வு முறையே இயற்கையானது எனும் கருத்திலிருந்தே தன்னினஉயர்வுவாதம் தோற்றம் பெறுவதாக மானிடவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். உண்மையில் ஏனைய பண்பாடு குறித்த ஆழமான அறிவுப் பின்னனியின் போதாமையால் தன்னினஉயர்வுவாதம் எழுவதால் பண்பாட்டு அறியாமையை (Culture ignorance) இது ஒரு வகையில் பிரதிபலிக்கின்றது.

தன்னினஉயர்வுவாத நடத்தையின் மிக ஆபத்தான நிலை, ஏனைய பண்பாடுகளையும் வாழ்வொழுங்கையும் தமது பண்பாட்டுடன் ஒப்பிட்டு மறுதலிக்கும் போக்கும் தமது பண்பாட்டை ஏனைய பண்பாட்டினர் ஏற்க வேண்டும் எனும் சிந்தனையுமாகும். இதன்படி பார்க்கும் போது தன்னினஉயர்வுவாதம் மூன்று படிநிலைகளைக் கொண்டிருக்கின்றது.

01. தமது சொந்த பண்பாட்டை உயர்வாக கருதும் செல்நெறி

02. ஏனைய பண்பாட்டுக் கூறுகளை தரக்குறைவாக கருதும் மனோநிலை

03. தமது பண்பாடுகளை உயர்வானது எனக் கருதி ஏனையோரும் அப்பண்பாட்டை பின்பற்றி நடக்க முனைய வேண்டும் எனும் மனோநிலையும் செயற்பாடுகளும்.

இன்றைய சீனா தன்னினஉயர்வுவாத சிந்தனைக்குள் மூழ்கியிருப்பதனை ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன. சீனா (China) தமது பண்பாட்டை உயர்வாக கொள்வதனை முதல் கட்டத்திற்கும், இஸ்லாமிய பண்பாடுகளை நிராகரித்துப் பேசுவதனை இரண்டாவது கட்டத்திற்கும், சீன முஸ்லிம்கள் தமது தனித்துவமான பண்பாடுகளை கைவிட்டு விட்டு சீனாவின் முழுமொத்த பண்பாட்டையும் ஏற்க வேண்டும் எனும் பலாத்காரமான திணிப்பை மூன்றாவது கட்டத்திற்கும் உதாரணமாகக் கூறலாம்.

தன்னினஉயர்வுவாதம் தோற்றம் பெற ஏனைய பண்பாடுகள் குறித்த போதிய அறிவின்மையும், தமது சொந்தப் பண்பாடு குறித்த அதீத உயர் எண்ணமுமே காரணம் என சமூகவியலாளர்கள் கருதுகின்றார்கள் (அய்யூப், 2005).

உளவியல் நோக்கில் ஆராய்ந்தால் தன்னினப்பற்று உணர்வானது போட்டி, பொறாமையினால் உருவானது அன்று. தன் சொந்தப் பண்பாட்டின் மீதுள்ள பற்றால் ஏற்படுவது. இந்த மனப்பான்மை சிலரிடம் உள்ள குறையை மறைப்பதற்காக இருக்கலாம் அல்லது தன்முனைப்பின் வெளிப்பாடாகவும் அமையலாம். பொதுவாகப் பண்பாட்டைப் பற்றிய நுட்பமான அறிவு இல்லாதவர்கள், வெளி உலகுடன் தொடர்பு கொள்ளாமல் இருப்பவர்கள், பிறருடன் நெருங்கிப் பழகாமல் தனித்திருக்கும் இயல்புடையவர்கள், பிறரிடம்

குற்றங்காணும் குணமுடையவர்கள், தீவிர மொழிப்பற்று, சமயப் பற்றுள்ளவர்கள், நாட்டுணர்வு உள்ளவர்கள், பகுத்தறிவு இல்லாதவர்கள், எதேச்சதிகார மனப்பான்மை உடையவர்கள் போன்றோரே தன்னினப்பற்றுடையவர்களாக உள்ளனர் (பக்தவத்சலபாரதி, 1999).

ஒருவர் தன் சமூகத்தின் மேல் உள்ள பற்றை இனமையவியம் மூலமே வெளிப்படுத்துகின்றார் என உளவியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். பொதுவாக அதிகளவு தொடர்பில்லாதவர்கள், பகுத்தறிவு இல்லாதவர்கள், பிறரோடு நெருங்கிப் பழகாத தனித்திருக்கும் குணம் கொண்டவர்கள், பிறரிடம் குற்றங்காணும் இயல்புடையவர்கள், தீவிர மதவுணர்ச்சி, மொழிப் பற்று, நாட்டுணர்வு கொண்டவர்கள், எதேச்சதிகார மனப்பான்மையுடையோர் போன்றவர்களே இத்தகைய சுய பண்பாட்டு பெருமைக் குணத்தைக் கொண்டிருப்பார்கள் என வாழ்வியற்களஞ்சியம் சுட்டிக்காட்டுகின்றது.

சமூகத்தில் காணப்படுகின்ற கல்வி நிறுவனங்கள், மத அமைப்புக்கள், பாடப்புத்தகங்கள், திரைப்படங்கள், நாவல்கள், பழமொழிகள், நாட்டுப்புறக் கதைகள், வயதானவர் உரைகள், சமய நூல்கள் போன்றவை தன்னினஉயர்வுவாதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் குழந்தைகளுக்கு ஊட்டுகின்றன.

இலங்கையில் வாழும் குறவர்களும், வேடர்களும் ஏனைய இனக் குழுக்களால் மாற்றுக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றார்கள். பாரம்பரிய வாழ்வோடும், எழிய தொழில் நுட்பங்களோடும் பின்னிக் காணப்படும் அவர்களது வாழ்வு முறை ஏழனமாக பார்க்கப்படுவது தன்னினஉயர்வுவாதப் பார்வையாகும்.

இலங்கையில் வாழும் இனங்களிற்கிடையிலேயும் தன்னினஉயர்வுவாதத்தின் பிரதிபலிப்புகளை அவதானிக்கலாம். உணவு, உடை, திருமணம், சமயம் போன்ற விடயங்களில் பரஸ்பரம் விமர்சனங்களை தெரிவிக்கின்ற போக்கினை பரவலாக அவதானிக்கலாம். இது இலங்கை இனங்களிடையே தன்னினஉயர்வுவாதம் புரையோடிப்போயுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.

தன்னினஉயர்வுவாதம் பாரம்பரிய பழங்குடி சமூகத்தில் மட்டுமல்லாது நவீன கைத்தொழில் சமூகத்திலும் கூட நிலவ முடியும் என சம்னர் (1906) கூறுகின்றார். இன்றைய நாட்டுப் பற்றும் (Patriotism) அதன் நீட்சியான தேசியவாதமும் (Nationalism) தன்னினஉயர்வுவாத வெளிப்பாட்டு வடிவங்களே என சம்னர் மேலும் விபரிக்கின்றார்.

தன்னினஉயர்வுவாதம் பாரிய அழிவுகளை உலகம் முழுவதும் தோற்றுவித்திருக்கின்றன. பல இனங்கள் அழிக்கப்படவும் பல நாடுகள் சுடுகாடாய் மாற்றப்படவும் காரணமாயிருக்கின்றன.

## 02. அயலினப்பற்றுவாதம்

அயலினப்பற்றுவாதம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் அமெரிக்க சமூகவியலாளர்களான கெண்ட் மற்றும் பர்னைட் (Danald P.Kentnd and Robert G.Burnight) ஆகியோரால் 1952 களில் உருவாக்கப்பட்டது. தனது சொந்த பண்பாட்டை ஏளனமாகவும் ஏனைய பண்பாடுகளை உன்னதமாகவும் கருதும் மனோநிலையே அயலினப்பற்றுவாதமாகக் கொள்ளப்படுகின்றது. சொந்தப் பண்பாட்டின் மீது வெறுப்பும் பிற பண்பாட்டின் மீது விருப்பும் கொள்வது அயலினப்பற்றுவாதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. சொந்தப் பண்பாட்டுச் சிறப்பம்சங்களை விளங்கிக் கொள்ளாமை மற்றும் சமூகத் தூரமாதல், சுயநலம், அதிகரித்த பண்பாட்டிறுக்கம், கருத்துச் சுதந்திரத்திற்கான கட்டுப்பாடு போன்றவை அயலினப்பற்றுவாதம் எழுவதற்கான அடிப்படைகளாக அமைந்து விடுகின்றன (அய்யூப், 2019).

இலங்கை, இந்தியா போன்ற கீழை நாடுகளில் வாழும் ஒருவர் மேற்குலகின் ஆடை அணியும் விதம், முடிவாரும் முறை போன்றவை சிறப்பானவை எனக் கருதி அதனைப் பின்பற்ற முயல்கின்றார். அதே போல் ஜப்பானிய இலத்திரனியல் உபகரணங்கள் உட்பட ஏனைய உற்பத்தி பொருட்கள் தரமானவை என கருதி கொள்வனவு செய்கின்றார். சுவிஸ் கைக் கடிகாரமும், இத்தாலியின் சூவும் ஏனைய உற்பத்திகளை விட தரமானவை எனக் கருதுகின்றார். வெளிநாடே உன்னதம் (Foreign is best) எனும் மனோநிலையின் வெளிப்பாடுகளே இவையாகும். பாரம்பரிய உணவு முறையும், சமையல் முறையும் முற்றாக பறிபோய்விடும் அபாயத்தில் இருக்கின்றன. எண்ணெயில் மிதக்கவிடப்பட்ட மற்றும் செயற்கை சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவுகளே எல்லா வயது மட்டங்களிலும் விருப்பிற்குரிய உணவாக உட்கொள்ளப்படுகின்றன. மேற்குலகம் சாப்பிட்டு சலித்துப் போன பேர்கர், சப்மெரின், டுவிஸ்ட் போன்றவை இலங்கையில் இப்போது நவீன உணவுகளாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆடையமைப்புகளும் நிறையவே மேற்கு ஆடைகளாக மாறிவிட்டன. இங்கு காணப்படும் பெரும்பாலான ஆடைக் கடைகள் இந்திய ஆடைகளையே அதிகமாக விற்பனை செய்கின்றன (அய்யூப், 2019).

பொழுதுபோக்கு விடயங்களில் கூட மேற்கின் தயாரிப்புகளிலேயே இலங்கை மக்கள் மூழ்கிக் கிடக்கின்றார்கள். ஹொலிவூட் படங்களை பார்க்கின்றார்கள். மல்புறோ சிகரட் குடிக்கின்றார்கள். இந்திய திரைப்படங்களிலும் பாடல்களிலும் மூழ்கிக் கிடக்கின்றார்கள். உள்நாட்டுத் திரைப்படங்களும், பாடல்களும் நாதியற்றுக் கிடக்கின்றன (அய்யூப், 2005). கிரிக்கட் எல்லோரையும் தின்று ஏப்பம் விட்டுவிட்டது.

## 03. பண்பாட்டுச் சார்பியம்

ஒவ்வொரு பண்பாடும் அதற்கே உரிய மதிப்பை பெற்று விளங்குகிறது. ஒரு பண்பாட்டை உயர்ந்ததென்றோ தாழ்ந்ததென்றோ கூற இயலாது. அவ்வாறு கூறுவதற்கான அனைத்து பண்பாடுகளையும் கடந்த பொதுக் கூறுகள் இல்லை. இதனையே பண்பாட்டு சார்புடைமைக் கொள்கை (Culture relativism) விளக்குகிறது. இக்கொள்கை பிரான்ஸ் போவாஸ் மற்றும் அவர்களது மாணவர்களால் ஆதிக்கமிக்க கொள்கையாக 20 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மாறியது (பக்தவத்சலபாரதி, 1999).

தனது சொந்த பண்பாட்டினை அளவீடாகக் கொள்ளாமல் ஒரு பண்பாட்டை அதற்கேயுரிய அளவீடுகளால் கணிக்கப்படுவதனையே பண்பாட்டுச் சார்பியம் (Cultural relativism) எனும் சொல் குறிக்கின்றது. உண்மையில் தனது பண்பாடு அல்லாத ஏனைய பண்பாடுகளை தப்பின்றி புரிந்து கொள்வதற்கு பண்பாட்டுச் சார்பியச் சிந்தனை வழிவகுக்கின்றது. சட்டம், ஒழுங்கு, அறம் போன்ற வியடங்களில் ஒவ்வொரு சமூகமும் கொண்டிருக்கும் பார்வைகளே அச்சமூகத்துக்கு சரியானவை. அப்பார்வைகளை ஏனைய பண்பாட்டாளர்கள் விமர்சிக்கவோ விமர்சித்து தமது பண்பாடுகளே உன்னதமானவை எனக் கூறவோ முடியாது என இக்கோட்பாடு குறிப்பிடுகின்றது.

ஒரு குறித்த சமூகத்தின் சமூக சூழ்நிலையிலிருந்தே (Social context) அதன் பண்பாட்டு பெறுமானங்கள், விழுமியங்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என இக்கோட்பாடு கூறுகின்றது. எது நல்லது எது தீயது எது சரியானது எது பிழையானது என்பதனை நிர்ணயிக்க சர்வதேச ரீதியான எந்த அளவுகோல்களும் இல்லாமையினால் குறித்த சமூகத்தின் பார்வைப் புலங்களிலிருந்தே குறித்த செயல் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என இக்கோட்பாடு விளக்குகின்றது. சரி பிழை தொடர்பான பொதுவான ஒழுக்கவியல் முறைமை (Ethical system) ஒன்று இல்லை என்று பண்பாட்டுச் சார்பியம் விளக்கின்றது.

பண்பாட்டுச் சார்பியத்தில் இரு நிலைப்பாடுகள் உள்ளன. விமர்சன பண்பாட்டுச் சார்பியம் (Critical cultural relativism) கேள்வி கேட்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. ஆனால் முழுமையான பண்பாட்டுச் சார்பியம் (Absolute cultural relativism) அத்தகைய சுதந்திரத்தை வழங்குவதில்லை. பண்பாட்டை அது நிலவும் சமூகத்தின் புறத்திலிருந்து நோக்க வேண்டும் என விளம்புகின்றது.

முழுமையான பண்பாட்டுச் சார்பியம் பல நாடுகளில் காணப்படுகின்றன. பெண் உறுப்பு சிதைப்பு (Female genital cutting) சோமாலியா, உகண்டா உள்ளிட்ட ஆபிரிக்காவின் 27 நாடுகளிலும் இன்னும் வேறுபல நாடுகளிலும் காணப்படும் பெண் பிறப்புறுப்பின் ஒரு பகுதியை வெட்டியகற்றும் ஒரு சடங்காகும். அமெரிக்கா போன்ற ஏனைய பண்பாடுகள்

இதனை விமர்சித்த போதும் சொந்த பண்பாடு இதனை பாதுகாப்பதனால் இச்செயலிலிருந்து பெண்களை தடுக்க முடியாதுள்ளது.

நான்கு வயதுக்கும் ஏழு வயதுக்குமிடையே பெண்களின் பாதங்களை சிறிதாக வைத்திருக்கும் நோக்கோடு பாதங்களைக் கட்டிவைக்கும் முறை (Foot binding) சீனாவில் காணப்படுகின்றது. சிறிய பாதங்களை அழகின் அடையாளமாகவும் அந்தஸ்துச் சுட்டியாகவும் கொள்ளப்படுவதனால் சீனப்பண்பாடுகளில் இதனை அவதானிக்க முடிகிறது. ஆண்களும் இத்தகைய சிறிய பாதங்களைக் கொண்ட பெண்களை அதிகம் விரும்புவதனால் 1912 களில் அரசாங்கம் இதற்கெதிரான சட்டங்களை இயற்றிய பொழுதும் தடுத்து நிறுத்த முடியவில்லை. பாதங்களை கட்டும் சிந்தனை மேற்கு நாடுகளால் விமர்சிக்கப்பட்ட போதும் அது அழகின் குறியீடாகவும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு கொண்ட மரபுச் செயலாகவும் சீனப் பண்பாடுகளால் பதிலளிக்கப்படுகின்றது. அழகு பற்றிய கருத்தாடல்கள் பண்பாட்டுக்கு பண்பாடு வித்தியாசப்படுகின்றது.

ஜல்லிக்கட்டு விளையாட்டு ஏனைய மாநிலங்களால் விமர்சிக்கப்பட்ட போதும் இந்திய தமிழ்ப் பண்பாட்டில் ஏற்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

குழந்தைகளைக் கொல்வது கொலையாக கருதப்பட்டாலும் பிரேசிலில் உள்ள டெனிடஹாரா (Tenetehara) சமூகத்தில் சட்டரீதியாக ஏற்கப்பட்டதாக காணப்படுகின்றது.

உணவுப் பாரம்பரியங்களும் சமூகத்துக்கு சமூகம் வேறுபடுகின்றது. மாட்டிறைச்சி முஸ்லிம் சமூகத்தால் சாப்பிடுவதற்கு ஏற்கப்பட்ட ஒன்று. ஆனால் தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களால் இது ஏற்கப்படவில்லை. பன்றி இறைச்சி முஸ்லிம் சமூகத்தால் தவிர்க்கப்பட்ட ஒன்று. ஆனால் கிறிஸ்தவ சமூகத்தால் ஏற்கப்பட்ட ஒன்று. இங்கு பண்பாட்டு நடைமுறைகள் குறித்த புரிதல்கள் குறையும் போது தன்னினஉயர்வுவாதம் தலைதூக்க முனைகின்றது.

ஆடைப் பாரம்பரியமும் சமூகத்துக்கு சமூகம் வேறுபடுகின்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அவர்களது பண்பாட்டுப் பின்புலங்களுக்கேற்ற உடைகளையே அணிகின்றார்கள். பண்பாட்டுச் சார்பியம் குறித்த சிந்தனையின் குறைபாடு ஆடை விடயத்தில் பல விவாதங்களை இலங்கை சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கிறது.

நடைமுறைப் பிரயோகம் இலங்கை சமூகத்தில் குறைவாக இருந்த போதும், பலதார திருமண முறை இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஏற்கப்பட்ட சிந்தனையாக காணப்படுகின்றது. எனினும் ஏனைய சமூகத்தவர்களால் மிகவும் கூர்மையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதை பரவலாக அவதானிக்கலாம்.

**முடிவுரை**

தன்னினஉயர்வுவாதமும், அயலினப்பற்றுவாதமும் இலங்கைச் சூழலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதனை ஆய்வுக் கண்டுபிடிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. பண்பாடுகளை எப்படி புரிந்து கொள்வது எனும் அறிவின்மையால் தன்னினஉயர்வுவாதம் எழுகின்றது. ஏனைய பண்பாட்டின் மீதுள்ள மோகத்தினால் அயலினப்பற்றுவாதம் தோன்றுகிறது. இவை இரண்டுமே இலங்கைச் சமூகத்துக்கு வேண்டாத இரு சிந்தனைகளாகும்.

பண்பாட்டுச் சார்பியம் ஒரு பண்பாட்டை சரியாக புரிந்து கொள்வதற்கான தெளிவைக் கொடுக்கின்றது. இன்று சமூகத்துக்கு தேவையானவை என நல்லிணக்கவாதிகளால் பேசப்படும் பண்பாட்டுப் பன்மைத்துவம் (Cultural pluralism), ஏற்றுக் கொள்ளல் (Acceptance), சகிப்புத் தன்மை (Tolerance) போன்ற சொல்லாடல்கள் பண்பாட்டுச் சார்பியத்தின் நீட்சியில் தோற்றம் பெற்ற கருத்தாடல்களாகும்.

**பரிந்துரைகள்**

சுற்றியிருக்கும் பண்பாடுகள் குறித்த அறிவை வழங்குதல், வெளிஉலகுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், பிற பண்பாட்டு சமூகத்தவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், எப்போதும் பிறரிடம் குறை காண்பவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்குதல், தீவிர மொழிப்பற்று மற்றும் சமயப்பற்றுள்ளோருக்கு நடுநிலைத் தன்மையை போதித்தல், சகிப்புத் தன்மை, நல்லிணக்கம், அன்பு போன்ற சமூக மூலதன (Social capital) பண்புகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற செயற்பாடுகளால் தன்னினஉயர்வுவாதத்தை கட்டுப்படுத்தி பண்பாட்டுச் சார்பியத்தை வளர்க்க முடியும்.

அதேபோல் சரியான அறிவை வழங்குவதன் மூலம் சொந்தப் பண்பாட்டின் மீது அதிக அக்கறையை உருவாக்க முடியும். அதேபோல் பொருள்சார் பொருள்சாரா பண்பாட்டில் சொந்தப் பண்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதன் மூலம் அயலினப்பண்பாட்டு மோகத்தை குறைக்க முடியும்.

**உசாத்துணை**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

2. அய்யூப், எஸ். எம். (2005). தன்னினஉயர்வுவாதமும் அயலினப்பற்றுவாதமும்: இலங்கையை மையப்படுத்திய ஆய்வு. *அதிர்வு,* 03.

3. அய்யூப், எஸ்.எம். (2019,டிசம்பர்,12 ). அயலினப்பற்றுவாதமும் இளைஞர்களும் : Retrieved from: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4027

4. பக்தவத்சலபாரதி. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

5. Bizumic, B. (2015). Ethnocentrism. In R. A. Segal & K. von Stuckrad (Eds.), *Vocabulary for the study of religion* (Vol. 1, pp. 533–539). Leiden, the Netherlands: Brill Academic Publishers.

6. Bizumic, B., and J. Duckitt. (2012). What Is and Is Not Ethnocentrism? A Conceptual Analysis and Political Implications. *Political Psychology*, 33: 887–909.

7. Bizumic, B., J. Duckitt, D. Popadic, V. Dru, and S. Krauss. (2009). A Cross-cultural Investigation into a Reconceptualization of Ethnocentrism. *European Journal of Social Psychology*, 39: 871–899.

8. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.

9. Haralambos M, and Heald R.M., (2004). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.

10. Landis, Paul H., (1990). *Sociology: An Introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.

11. Rao Sankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.

12. Rorty, R., (1986). On Ethnocentrism: A Reply to Clifford Geertz. *Michigan Quarterly Review*, 25: 525– 534.

13. Rane Dentiste., Mueller.& Geoge Xun Wang. (2015). Consumer Xenocentrism in China: an Exploratory Study. Retrieved from: https://www.emerald.com/insight/content/doi/10.1108/APJML-11-2014-0158/full/html